## நம்மை நாம் பலப்படுத்திக் கொண்டால்

# கூட்டணியே இல்லாமல் தி.மு. கழகத்தால் வெற்றி வாகை சூட முடியும்!

## தூத்துக்குடியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**தூத்துக்குடி, மே 20-**

**தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி எட்டையாபுரம் சாலையில் உள்ள கலைஞர் அரங்கில் 18.05.2026 அன்று நடைபெற்றது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் திமுக துணைப் பொது செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.**






நிகழ்வில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:-

எதிர்பார்க்காத சூழலில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நாம் செய்திருக்கும் மிகச் சிறப்பான திட்டங்களை மக்கள் உணர்ந்து கொண்டு, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள அனைவரையும் சென்றடையும் பயனுள்ள திட்டங்களை தமிழக மக்களுக்காக முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

### மக்கள் வேறு ஒரு முடிவை எடுத்து விட்டார்கள்!

தமிழக மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்திருக்கிறார்கள்; தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகப் போராடியிருக்கிறார்கள். இதையெல்லாம் உணர்ந்த மக்கள் நமக்கான வெற்றியை வழங்குவார்கள் என்று திடமாக நம்பியிருந்த நேரத்தில், மக்கள் பல்வேறு காரணங்களால் வேறு ஒரு முடிவை எடுக்கக் கூடிய சூழலை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அத்தனை பேருக்கும் தெரியும். தேர்தல் வெற்றி, தோல்வி என்பது நமக்கு புதிதான ஒன்றில்லை. எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளை கண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். தலைவர் கலைஞர் அவர்கள் தோல்வியை சந்தித்த பிறகும், அடுத்த சில தினங்களிலேயே நன்றி அறிவிப்பு கூட்டத்தை அறிவித்து, கழக தோழர்களை உற்சாகப் படுத்தி, தொடர்ந்து இந்த இயக்கத்தை உயிர்ப்போடு வைத்திருந்தார்கள் என்பது இங்கே உள்ள அனைத்து நிர்வாகி களுக்கும் தெரியும்.

அதேபோல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், யாராலும் ஜீரணிக்க முடியாத தேர்தல் தீர்ப்புக்குப் பிறகும் தன்னுடைய தொகுதிக்கு சென்று, தனக்கு வாக்களிக்காத மக்களுக்குக் கூட நன்றி தெரிவித்தார்கள். அங்கு மக்கள் கலங்கி நின்ற சூழலிலும், அவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

### தேர்தல் முடிவுக்குப் பிறகும் உயிர்ப்போடு திகழும் கழகம்!

எல்லோரையும் திகைக்கச் செய்த தேர்தல் முடிவுக்குப் பிறகும், திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் உயிர்ப்போடு உள்ளது. இங்கு அத்தனை பேரும் ஒருவரை ஒருவர் சந்தித்து, உற்சாகப்படுத்திக் கொள்ளுவதற்காக வந்திருக்கிறோம்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுகவில் 2 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதுவரை வெற்றி பெறாத கோவில்பட்டியிலும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். அதற்காக உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், என்னைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில், நம்முடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய தொகுதியில் வெற்றி பெறாத சூழலை எப்படி ஏற்றுக்கொள்ள முடியவில்லையோ, அதேபோல் என்னாலும் தூத்துக்குடி தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

### அனைவரையும் அறிந்தவர் கீதா ஜீவன்!

கீதா ஜீவன் அவர்களுடன் ஒரு தெருவில் சென்றால், அங்கே இருப்பவர்களை பெயர் சொல்லி அழைக்கும் அளவிற்கு மக்களோடு நெருக்கமாக பழகியவர். ஆனாலும், வெற்றிவாய்ப்பை சரியாகப் புரிந்துகொள்ள முடியாத காரணங்களால் நாம் தோல்வியை சந்தித்திருக்கிறோம். இத்தனைக்கும் அப்பாற்பட்டு, இன்று மீண்டும் நம்முடைய வெற்றிக்காக இன்றிலிருந்தே பாடுபட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அடுத்து வரக்கூடிய உள்ளாட்சி தேர்தலாக இருக்கட்டும், நாடாளுமன்ற தேர்தலாக இருக்கட்டும், இதற்கிடையில் சட்டமன்ற தேர்தலும் வரலாம். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, சற்றும் சோர்வில்லாமல் அதே உறுதியோடு பணியாற்ற வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், யாரும் எதிர்பார்க்காத தோல்வி என்று சொல்லும் போது, ஏன் இந்த தோல்வியை நாம் எதிர்பார்க்கவில்லை? எது கள நிலவரத்தை நமக்கு சரியாகப் புரியாமல் செய்து விட்டது? என்ற கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய நிலையில்தான் நாம் தற்போது இருந்து கொண்டிருக்கிறோம்.

### உங்களின் கருத்துக்களை அறிய தலைவர் அறிவித்த குழு!

அதைப் புரிந்துகொள்வதற்காகத்தான், உங்களிடமிருந்து கருத்துகளை கேட்டு தெரிந்துகொள்வதற்காகத்தான் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டு பேர் கொண்ட குழுக்களாக 30 நபர்களைத் தேர்வு செய்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு நாள் தங்கி, அங்கே உள்ள கழக நிர்வாகிகள், இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் அனைத்து தொண்டர்களையும் சந்தித்து, இந்த நிலைக்கு காரணம் என்ன என்பதைப் பற்றிய அவர்களுடைய கருத்துகளை கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

எந்தவித தயக்கமும் இல்லாமல் அவர்களுடன் பேச வேண்டும்; அந்த நேரத்தில் அவர்கள் மட்டுமே இருக்க வேண்டும், அவர்களுடன் வேறு யாரும் இருக்கக் கூடாது என்பதையும் தலைவர் திட்ட வட்டமாக தெரிவித்திருக்கிறார்கள்.

### கருத்துக்களை நீங்கள் வெளிப்படையாகச் சொல்லுங்கள்!

ஒரு தவறு நடந்திருக்கிறது என்பது தெரிந்த விஷயம். அதனை தைரியமாகவும் தெளிவாகவும் எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் இது. அதைத்தாண்டி, நாம் எதையெல்லாம் தவறவிட்டோம், எதைச் செய்திருந்தால் வெற்றி உறுதியாகியிருக்கும் என்பதையும் பற்றிய உங்கள் கருத்துகளை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

உங்களுடைய கருத்துகளை நீங்கள் வெளிப்படையாகச் சொன்னால்தான், தலைமையில் இருப்பவர்கள் மறுசீரமைப்புகளை செய்யும் போது அவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு கழக கட்டமைப்புகளை மாற்ற முடியும். அதனால், எந்த தயக்கமும் இல்லாமல் உங்கள் உண்மையான கருத்துகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று உங்களிடம் அத்தனை பேரிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், யாரைப் பற்றியும் தனிப்பட்ட காரணங்களால் குற்றம் சாட்டும் நிலை உருவாகக்கூடாது.

### நம்மை நாமே சரிசெய்து தீவிரமாகப் பணியாற்றுவோம்!

நம்முடைய கட்சியின் பாதை என்னவாக இருக்க வேண்டும், எப்படி நம்மை நாமே சரிசெய்துகொள்ள வேண்டும் என்பதற்கான கருத்துகளை அந்தக் குழுவிடம் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

நம்முடைய மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் அவர்கள், தாம் வெற்றி பெறாவிட்டாலும், மாவட்டத்தில் உள்ள இரண்டு தொகுதிகளில் வெற்றியை பெற்றுத்தந்துள்ளார். அதற்காக அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவில்பட்டி வெற்றி என்பது எனக்கு நம்பமுடியாத அளவிற்கு மகிழ்ச்சியான செய்தியாக இருந்தது. அந்த தொகுதியில் திமுக போட்டியிடும் வாய்ப்பு அதிகமாக கிடைத்ததில்லை. எப்போதும் அது கூட்டணிக் கட்சிகளுக்குச் செல்லக்கூடிய சூழல்தான் இருந்து வந்தது.

நீண்ட காலத்திற்குப் பிறகு முதல் முறையாக நமக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை தவறவிடாமல், அந்த தொகுதியில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். அந்த வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் எல்லா இடங்களுக்கும் செல்லும் போது, “கூட்டணி கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல், தி.மு.க. நேரடியாக போட்டியிட வேண்டும்” என்று பலரும் தொடர்ந்து கூறுவார்கள். நான் கூட வேடிக்கையாக, “கூட்டணி வேண்டாமா?” என்று கேட்பேன்.

### தி.மு.க.வினரால் முடியும்! வென்று காட்டுவோம்!

இன்று, கூட்டணிகளை பற்றி நாம் சிந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்திலே நின்று கொண்டிருக்கிறோம். ஆனால், முதலில் நம்மை நாமே பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மை பலப்படுத்திக் கொண்டால், யாருடைய உதவியும் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தால் வெற்றி பெற முடியும்; அதை வென்று காட்டுவோம். நாம் யார் என்பதை விரைவில் நிரூபிப்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

இந்த நிகழ்வில், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

## விபத்தில் கையை இழந்த பெண்ணுக்கு ரூ.2 லட்சத்தில் செயற்கை கை!

# தேர்தலில் தோல்வியைத் தழுவினாலும் வாக்குறுதியை நிறைவேற்றிய முன்னாள் எம்.எல்.ஏ., க.செல்வராஜ்!

## திருப்பூர் பகுதி மக்களிடையே பெரும் பாராட்டு பெற்றுள்ளது!

திருப்பூர், மே 20-

தேர்தலில் தோற்றாலும் விபத்தில் கையை இழந்த பெண்ணுக்கு ரூ.2 லட்சத்தில் செயற்கை கை வழங்கி சொன்ன சொல்லைக் காப்பாற்றிய முன்னாள் எம்.எல்.ஏ. க.செல்வராஜை திருப்பூர் பகுதி மக்கள் பாராட்டுகின்றனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் அடுத்த ஆண்டிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் நாச்சிமுத்து. இவருடைய மனைவி அன்னபூரணி. இந்தத் தம்பதியருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அன்னபூரணி அப்பகுதியில் உள்ள பாலி பேக்கிங் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தார். கடந்த ஜனவரி மாதம் வழக்கம்போல் பணியில் ஈடுபட்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக இயந்திரத்தில் சிக்கி அன்னபூரணியின் வலது கை துண்டானது. இதனால் குடும்பத்தை நடத்த முடியாமலும், அன்றாடப் பணிகளைச் செய்ய முடியாமலும் அன்னபூரணி பெரும் அவதிக்குள்ளாகி வந்தார்.

இந்தநிலையில், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆண்டிபாளையம் பகுதிக்கு வாக்குச் சேகரிக்க வந்த திமுக வேட்பாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான செல்வராஜிடம் அன்னபூரணி தனது நிலையை எடுத்துக் கூறி, தனக்கு உதவுமாறு கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்தார். அவரது நிலையைக் கண்டு உருகிய செல்வராஜ், தேர்தல் முடிந்த பின்பு நிச்சயம் உதவி செய்வதாக அன்னபூரணிக்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

தேர்தல் முடிவுகளில் முன்னாள் எம்எல்ஏ செல்வராஜ் தோல்வியைத் தழுவினார். இருப்பினும், பதவியில் இல்லாவிட்டாலும் பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில், தனது சொந்த செலவில் சுமார் ரூ.2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அதிநவீன செயற்கை கையை அவர் தயார் செய்தார்.

இதனைத் தொடர்ந்து, இன்று திருப்பூர் சோலாபுரி அம்மன் கோவில் வளாகத்தில் வைத்து, அன்னபூரணிக்கு அந்த செயற்கை கையானது முறைப்படி பொருத்தப்பட்டது.

செயற்கை கை பொருத்தப்பட்ட பின் நெகிழ்ச்சியுடன் பேசிய அன்னபூரணி, ஒரு கையை இழந்துவிட்டு குடும்பத்தை நடத்த மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்திருந்த தி.மு.க. வேட்பாளர் செல்வராஜ் அவர்களிடம் எனது சூழ்நிலையைக் கூறி உதவி கேட்டேன். அவரும் தேர்தல் முடிந்ததும் செய்வதாக உறுதியளித்தார். தேர்தலில் அவர் தோல்வியுற்ற போதிலும், எனக்குக் கொடுத்த வாக்கை மறக்காமல் காப்பாற்றியுள்ளார். தனது சொந்த பணத்தில் ரூ.2 லட்சம் மதிப்பிலான செயற்கை கையை எனக்கு இலவசமாகப் பொருத்தியுள்ளார். அவருக்கு என் வாழ்நாள் முழுதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்,” என்று தெரிவித்தார்.

தோல்விக்குப் பிறகும் மக்கள் பிரதிநிதியாகத் தான் கொடுத்த வாக்குறுதியை முன்னாள் திமுக எம்எல்ஏ செல்வராஜ் நிறைவேற்றியுள்ள இந்தச் சம்பவம் திருப்பூர் பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியையும், பெரும் பாராட்டுகளையும் பெற்று வருகிறது.

---

## வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஜூன் 3 அன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளில் நல உதவிகள்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், மே 20 -

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க., அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் எஸ். தாமோதரன், வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன், முன்னாள் எம்.எல்.ஏ., அமலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நடந்து முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் தி.மு.க.,வின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேலூர் தொகுதி வேட்பாளர் ப. கார்த்திகேயன், அணைக்கட்டு தொகுதி வேட்பாளர் ஏ.பி.நந்தகுமார் ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திலும், குடியாத்தம் தொகுதி தே.மு.தி.க., வேட்பாளர் கே.பி. பிரதாபுக்கு முரசு சின்னத்திலும் வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும், தேர்தல் களப்பணி ஆற்றிய மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக தலைவர் ஆற்றிய உரையினை கவனத்தில் கொண்டு நாம் ஒவ்வொருவரும், நம்மை நாமே சுய பரிசோதனைக்கு உட்படுத்தி உண்மையான உடன்பிறப்புகளாக நம்மை முன்னெடுத்து கட்சியின் தலைவர் எடுக்கும் அத்தனை முடிவுகளையும் உள்வாங்கி எதிர்கால அரசியல் களத்தை நமது அயராது உழைப்பால் கட்டமைத்து வெற்றியை நோக்கி பணி ஆற்றுவோம். தோல்வியில் இருந்து மீண்டு தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியை அமைப்போம் எனவும்,

ஜூன் 3ந் தேதி முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை வேலூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டாட வேண்டும் எனவும்,

நடந்து முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தேர்தல் களம் கண்டு வெற்றி வாகை சூடி தேர்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதன் வாயிலாக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக தேர்வு பெற்ற கட்சியின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கும் வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவிப்பது.

அதே வேளையில் கூட்டணி தர்மத்திற்கு எதிராக சுய நலத்தோடு, அநாகரிகமாக நடந்து கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு கண்டனத்தை தெரிவிப்பது என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் தொடர்ந்து 7வது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் அர.சக்கரபாணிக்கு தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.சி. தங்கம் தலைமையில் நிர்வாகிகள் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ் உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.